**IN THE COURT OF THE SUB JUDGE, DENKANIKOTTAI**

**MCOP.No. 15 /2023**

Deposition of witness for **PW1** for Petitioner and solemnly affirmed and oath for sworn taken file by Tr. R.Sankar, Gr.II Bench Clerk in accordance with the provisions of Act 1975.

| | | | |
|---|---|---|---|
| Name | : Bhagya Rekha | Husband Name | : Murali Reddy |
| Village | : | Taluk | : Hosur |
| Caste | : | Calling | : |
| Religion | : Hindu | Age | : |

**நாள்:03.04.2024**

**மனுதாரர் முதல் விசாரணை :**

சத்தியமாக சொல்கிறேன். நான் இந்த வழக்கில் மனுதாரர், ம.சா.1 ஆக இருந்து எனது முதன்மை சாட்சிய பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதனை சாட்சியமாக ஏற்க வேண்டுகிறேன். அசல் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை சான்றாவணங்களாக பெற வேண்டுகிறேன். குற்ற எண்.275/2021 முதல் தகவல் அறிக்கை உண்மை நகல் **Ex.P**1 ஆகவும், 16.08.2021ம் தேதிய விபத்து பதிவேடு அசல் **Ex.P**2 ஆகவும், 16.08.2021ம் தேதிய கேஸ் சீட் அசல் **Ex.P**3 ஆகவும், மனுதாரர் பாக்கியரேக்காவுக்கு வழங்கப்பட்ட காயச்சான்றிதழ் அசல் **Ex.P**4 ஆகவும், எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டு படிவம் ஜெராக்ஸ் நகல் **Ex.P**5 ஆகவும், எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்றிதழ் ஜெராக்ஸ் நகல் **Ex.P**6 ஆகவும், மனுதாரருககு வழங்கப்பட்ட மருத்துவ பில்கள் அசல் **Ex.P**7 ஆகவும், (2ம் எதிர்மனுதாரர் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது). , மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் சரிபார்க்கப்பட்டது **Ex.P8 ஆகவும்,** மனுதாரரின் பேன் கார்டு அசலுடன் சரிபார்க்கப்பட்டது **Ex.P9 ஆகவும்,** மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் அசலுடன் சரிபார்க்கப்பட்டது **Ex.P10 ஆகவும்,** குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

16.08.2021ல் விபத்து நடைப்பெற்றது. விபத்து இரவு 7 மணிக்கு நடைப்பெற்றது. விபத்து கோவிலுக்கு அருகில் நடைப்பெற்றது. விபத்து நடந்த போது என்னுடன் காயத்திரியும் வந்தார். விபத்து சமயத்தில் நானும் எனது தோழி காயத்திரியும் இரவு

நேரத்தில் சாலையை கவனக்குறைாக கடந்தோம் என்றும் அதனால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல நாங்கள் சாலையை கடக்கவில்லை நின்று கொண்டு இருந்தோம். விபத்து எங்களது கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றும் இருசக்கர வாகனத்தின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல நாங்கள் சாலையின் வலது புறம் தான் நின்று கொண்டு இருந்தோம். எங்கள் மீது மோதிய இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தவர் மஞ்சுநாத். மஞ்சுநாத்தின் அம்மா தான் 1ம் எதிர்மனுதாரர் என்றால் அது எனக்கு தெரியாது. என் மீது மோதிய இருசக்கர வாகனத்தின் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அது எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாததால் எனக்கு ஏதேனும் இழப்பீடு வரவேண்டும் என்றால் 1ம் எதிர்மனுதாரரிடம் தான் கேட்க வேண்டும் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் பாலிசி விதிமீறல் செய்துள்ளதால் 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. விபத்துக்கு முன்பு ரத்தினா பேக்கேஜில் வேலை செய்தேன். நான் தற்போதும் வேலை செய்கிறேன் ஆனால் முன்பு போல் வேலைக்கு செல்லவில்லை. எனக்கு விபத்தின் காரணமாக நிரந்தர ஊனமோ செயல்திறன் பாதிப்போ வருமான இழப்போ இல்லை என்றால் சரியல்ல. விபத்துக்கு பின்பு கெலமங்கலம் அரசு மருத்துவமனைக்கு முதலில் சிகிச்சைக்கு சென்றேன். அதன் பின்பு ஒசூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன் அங்கு முடியாது என்று சொன்னதால் காவேரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். விபத்தில் எனக்கு இடது முன்கை, வயிறு, பின்புறம் முதுகு மற்றும் கைகளில் சிறிய சிறிய காயம் ஏற்பட்டுள்ளது. இழப்பீடு பெறும் வகைக்கு எனது காயத்தை அதிகப்படுத்தி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்களில் குறிப்பிட்டுள்ள செலவு எனக்கு ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் ரத்தினா பேக்கேஜ்ஜில் வேலை பார்ப்பதற்கு சம்பள சான்றிதழ் உள்ளது. அதை நான் நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேன். நான் சொல்வது தவறு என்றும் அவ்வாறு சம்பள சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது மறுவிசாரணை இல்லை.**

**ஒம்./–எல்.கலைவாணி,பி.எ.,பி.எல்.,**
**சார்பு நீதிபதி,**
**தேன்கனிக்கோட்டை.**

**IN THE COURT OF THE SUB JUDGE, DENKANIKOTTAI**

**MCOP.No. 15 /2023**

Deposition of witness for **PW2** for Petitioner and solemnly affirmed and oath for sworn taken file by Tr. R.Sankar, Gr.II Bench Clerk in accordance with the provisions of Act 1975.

| | | | |
|---|---|---|---|
| Name | : Gayathri | Husband Name | : Venkataraj |
| Village | : | Taluk | : Denkanikottai |
| Caste | : | Calling | : |
| Religion | : Hindu | Age | : |

**நாள்:03.04.2024**

**மனுதாரர் முதல் விசாரணை :**

சத்தியமாக சொல்கிறேன். மனு எண்.18/2023 ல் மனுதாரர், ம.சா.2 ஆக இருந்து எனது முதன்மை சாட்சிய பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதனை சாட்சியமாக ஏற்க வேண்டுகிறேன். அசல் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை சான்றாவணங்களாக பெற வேண்டுகிறேன். 22.08.2021 ம் தேதிய விடுவிடுப்பு சான்றிதழ் அசல் **Ex.P**11 ஆகவும், மனுதாரர் காயத்திரியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் சரிபார்க்கப்பட்டது **Ex.P**12 ஆகவும், மனுதாரர் காயத்திரியின் பேன் கார்டு அசலுடன் சரிபார்க்கப்பட்டது **Ex.P**13 ஆகவும், மனுதாரர் காயத்திரியின் வங்கி கணக்கு புத்தகம் அசலுடன் சரிபார்க்கப்பட்டது **Ex.P**14 ஆகவும், மனுதாரர் காயத்திரிக்கு வழங்கப்பட்ட சம்பள சான்றிதழ் ஜெராக்ஸ் நகல் **Ex.P**15 ஆகவும், குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

16.08.2021 ல் விபத்து நடைப்பெற்றது. விபத்து இரவு 7 மணிகது நடைப்பெற்றது. விபத்து கோவிலுக்கு அருகில் நடைப்பெற்றது. விபத்து நடந்தபோது என்னுடன் பாக்கியரேக்கா வந்தார். விபத்து சமயத்தில் நானும் எனது தோழி பாக்கியரேக்கா இரவு நேரத்தில் சாலையை கவனக்குறைாக கடந்தோம் என்றும் அதனால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நாங்கள் சாலையை கடக்கவில்லை நின்று கொண்டு இருந்தோம். விபத்து எங்களது கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றும் இருச்சக்கர வாகனத்தின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல நாங்கள் சாலையின் வலது புறம் தான் நின்று கொண்டு இருந்தோம். எங்கள் மீது மோதிய இருசக்கர வாகனத்தை

ஓட்டி வந்தவர் மஞ்சுநாத். மஞ்சுநாத்தின் அம்மா தான் 1ம் எதிர்மனுதாரர் என்றால் அது எனக்கு தெரியாது. என் மீது மோதிய இருசக்கர வாகனத்தின் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அது எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாததால் எனக்கு ஏதேனும் இழப்பீடு வரவேண்டும் என்றால் 1ம் எதிர்மனுதாரரிடம் தான் கேட்க வேண்டும் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் பாலிசி விதிமீறல் செய்துள்ளதால் 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. விபத்துக்கு பின்பு கெலமங்கலம் அரசு மருத்துவமனைக்கு முதலில் சிகிச்சைக்கு சென்றேன். அதன் பின்பு ஒசூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன் அங்கு முடியாது என்று சொன்னதால் காவேரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். விபத்தினால் எனக்கு இடது காலில் கொடுங்காயம் ஏற்பட்டது. வலது பக்க தொடையில் காயம் ஏற்பட்டது. எனக்கு விபத்தின் காரணமாக நிரந்தர ஊனமோ செயல்திறன் பாதிப்போ வருமான இழப்போ இல்லை என்றால் சரியல்ல. நான் தற்பேது 3 மாதமாக தான் வசதி இல்லாததால் வேலைக்கு செல்கிறேன் அதற்கு முன்பு வேலைக்கு செல்லவில்லை. நான் கேட்டுள்ள இழப்பீடும் வட்டி விகிதமும் அதிகம் என்றால் சரியல்ல. தற்போதும் நான் மருந்துகள் எடுத்துகொள்கிறேன். 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது மறுவிசாரணை இல்லை.**

**ஓம்./−எல்.கலைவாணி,பி.எ.,பி.எல்.,**
**சார்பு நீதிபதி,**
**தேன்கனிக்கோட்டை.**